தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1975 மார்ச 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Selection Grade Scale of Pay to B.T. Assistants

* 172 Q.—THIRU P. R. THOMAS & THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that a number of B.T. Assistants are deprived of the Selection Grade Scale of Pay from 1st April 1973, as G.O. Ms. No. 519, Education, dated 31st March 1973, limits the calculation of the services, to services under the respective unit of appointment ; and

(b) if so, whether the Government propose to issue orders to take into account their services under all types of managements such as Municipalities, Corporations or 'A' and 'B' Wing, for purposes of the above G.O.?

பி.டி. ஆசிரியர்களுக்கு தேர்வுத்தர ஊதியம்

திருவாளர்கள் பி.ஆர். தாமஸ் & டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம் :

(அ) கல்வித் துறையின் 31-3-1973 நாளிட்ட 519 ஆம் எண் அரசாணையானது பி.டி. ஆசிரியர்களின் பணிகளை அவர்களது நியமனப் பிரிவின்கீழ் வரும் பணிகளில் மட்டும் சேர்த்துக் கணக்கிடும் வகையில் வரையறை செய்வதால் பி.டி. ஆசிரியர்கள் 1-4-1973 முதற் கொண்டு தேர்வுத்தர வீதத்தில் சம்பளம் பெற இயலாமல் போகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், மேற்சொன்ன அரசாணையின் காரியத்திற்காக நகராட்சிகள், மாநகராட்சிகள் அல்லது 'A', 'B' வகை பள்ளிக்கூடம் போன்ற எல்லா வகையான நிர்வாகங்களின் கீழும் அவர்கள் ஆற்றிய பணிகளை கணக்கில் எடுத்துக்கொள்ளுமாறு ஆணை பிறப்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது பற்றிய கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே.எஸ். கணபதி : தலைவரவர்களே, இது 1973-ம் ஆண்டு போடப்பட்டுள்ள உத்தரவு. இது பிறப்பிக்கப்பட்டு இரண்டாண்டு காலம் ஆகிவிட்டது. அதற்குப் பிறகு 1974 ஜூன் வரையில் இடைநிலை ஆசிரியர்கள் விஷயத்தில் உத்தரவு போடப்பட்டுள்ளது. அதிலே அவர்களுடைய முழுமையான பணிக்காலம் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஆனால் பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்தில் இந்த முறை அறிவிக்கப் படவில்லை. இந்த காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இயக்குநர் அவர்கள் அதுபற்றிப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதுபற்றிய விளக்கங்கள், விவரக்குறிப்புகள் இயக்குநர் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன்பேரிலே எவ்வளவு செலவாகும் என்பது போன்ற விவரக் குறிப்புகள் அவரிடமிருந்து வரவில்லை. வந்த பிறகு முடிவெடுக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர்களுக்கு இந்த முறையில் வழங்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டும், பட்டதாரி ஆசிரியர்கள் விஷயத்தில் இது விடுபட்டுப் போயிருக்கிறது. இது முறையாகாது. இப்போது இதிலே எவ்வளவு செலவாகும் என்று பார்க்க வேண்டிய அவசியமில்லை, இது ஒரு 'க்ளெரிகல் எர்ரர்'. இடை நிலை ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்போது, பட்டதாரி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். இதுபற்றிய விவரங்களைத் தயாரித்த நேரத்திலே பட்டதாரி ஆசிரியர்கள் என்பதைச் சேர்க்காமல் விட்டு விட்டார்கள். அவ்வளவுதான். அந்த அடிப்படையில் இதை உடனடியாக அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போதுள்ள நிலையில் இதற்கு நிதி ஒதுக்கீடு வேண்டும். எனவே நிதி இலாகாவின் ஒப்புதல் வேண்டும் என்ற காரணத்தினால்தான் எவ்வளவு செலவாகும் என்பது பற்றிய முழு விவரங்கள் வேண்டும் என்று குறிப்பிட்டேன். இதனாலே சிறிது காலத் தாழ்வு ஏற்படு கின்றது. விரைவில் முடிவெடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலே, சில பிரச்சினைகளில் சி.இ.ஓ.க்கள் அவர்களுடைய முழு சர்வீஸைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், 'க்ளாரிஃபிகேஷன்' வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அரசு உத்தரவில் மிகத் தெளிவாக மேனேஜ்மெண்ட் பள்ளி ஆசிரியர்களுடைய ஊழியக் காலம் முழுவதையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப் பட்டிருந்தும் கூட, அதை முறையாக அமுல்படுத்தாமல், விளக்கம் வேண்டும், கிளாரிஃபிகேஷன் வேண்டும் என்று அதைக் காலம் தாழ்த்து வதற்கான முயற்சிகளில் ஈடுபடும் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கான முயற்சியினை அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பொதுவாக இது விஷயங்களிலே அதிகாரிகளுக்குத் தெளிவான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களிலே சிலரைப் பொறுத்து சில விளக்கங்களைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படு கின்றது. ஆகவே அதிகாரிகள் அவ்வளவு பேரும் காலத்தாழ்வு ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில் பணி புரிகின்றார்கள் என்று நான் கருதவில்லை. ஆனால் காலத்தாழ்வு ஏற்படுவதற்கான சூழ் நிலைகளை தனித்தனியாகத்தான் பார்க்க வேண்டியிருக்கின்றது. பொது வாக ஐயப்பாடுகள் எனறு எழும்போது, விளக்கங்களைப் பெற வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பிரச்சினை களிலே சில நேரங்களிலே அவர்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையில் செயலாளரிடத்தில் நேரடியாக அவர்களுடைய குறைகள் பற்றிக் கொடுத்து விட்டால் அங்கே நேரடியாகக் கொடுத்து விட்டார்கள் என்ற எண்ணத்திலே கீழே உள்ள அதிகாரிகள் காலதாமதத்தை உருவாக்குகின்றார்கள். அதுபோன்றே சி.இ.ஓ. மட்டத்திலே நாங்கள் கொடுத்தாலும் கீழே உள்ள அதிகாரிகள் அதை வேறுவிதமாக எடுத்துக் கொண்டு தவருக நடந்து கொள்ளும் முறை மாற்றப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, குறிப் பிட்ட இடங்களிலே தெரிந்தே இப்படிப்பட்ட காலத்தாழ்வுகள் ஏற்பட்டிருக் கின்றன என்று கருதி முறைப்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப் பட வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அது அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட வேண்டும். அப்படிக் கொண்டு வரும் போது, அவற்றிலே சில தனிப்பட்ட நிலைமை இருந்தால், அதுபற்றி ஆராய்ந்துதான் என்ன முடிவெடுக்கப்பட வேண்டுமோ அதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இந்தச் சலுகைகளை வழங்குவதில், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் விஷயத் தில் அந்த நிறுவனங்களின் கீழே பணிபுரியும் காலத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அத்தகைய உத்தரவு வரவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது உண்மையானல் இதுபற்றி அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் இந்த நிலைமை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனல் பி.டி. ஆசிரியர்கள், அவர்களுக்கு அடுத்த முதல் நிலைத் தமிழாசிரியர்கள், ஸ்பெஷலிஸ்டு ஆசிரியர்கள் பற்றிய பிரச்சினை இருக்கின்றது. மறுக்க வில்லை. அதுபற்றி விரைவில் முடிவெடுக்கப்படும்.